# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No.557/2022**

Prosecution witness: **4**

| | | | |
|---|---|---|---|
| Name: | சுகுமாரன் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

All Accused present.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **03.05.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது கரூர்மாவட்டத்தில் மாவட்ட குற்றப்பிரிவில் துணை காவல் கண்காணிப்பாளரா பணியில் உள்ளேன். இதற்கு முன்னர் திண்டுக்கல் மவாட்டம் கன்னிவாடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 18.05.2013 தேதி கன்னிவாடி காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது 15.00 மணிக்கு ரகசிய தகவலாளி தொலைபேசி மூலம் தெரிவித்த தகவலின் அடிப்படையில் நான் சார்பு ஆய்வாளர்-சண்முகம், சிறப்பு சார்பு ஆய்வாளர்-சுந்தரவடிவேல், கனகராஜ், தலைமைக்காவலர்-ஜெகதீஷ் மற்றும் வரவழைக்கப்பட்ட சாட்சிகள் ஜோதிமற்றும் தங்கராஜ் ஆகியோரை என் தலைமையில் அழைத்துககொண்டு 4.00 மணிக்கு தக்க உபகரணங்களை எடுத்துக்கொண்டு தருமத்துப்பட்டி-பாறைகோட்டை சாலையில் ரோந்து சென்றுகொண்டிருந்தபோது மொட்டுக்கோம்பையில் உள்ள கரிசல்பட்டியை சேர்ந்த ஆரோக்கியம் என்ற

இராமர் என்பவருக்கு சொந்தமான தோட்டத்தில் ஆஸ்பெட்டாஸ் செட்டிற்கு முன்னர் சென்றபோது பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்துகொண்ட ஆரோக்கியம் மகன் உதயகுமார், சந்தமநாயக்கன்பட்டியை சேர்ந்த தற்போது தருமத்துப்பட்டியில் வசித்து வரும் கல்யாணி தேவர் மகன் சௌந்திரபாண்டி, சௌந்திரபாண்டி மனைவி பசுங்கிளி ஆகியோர் இருந்தார்கள். போலீஸ்பார்ட்டியாகிய எங்களை கண்டதும் சௌந்திரபாண்டியும், பசுங்கிளியும் தப்பி ஓடிவிட்டனர். அந்த இடத்தில் இருந்த உதய குமாரை மட்டும பிடித்து விசாரித்தபோது கையில் பாலிதீன் பேக் ஒன்றை வைத்திருந்தார். அவரிடம் நாங்கள் எங்களை சுய அறிமுகம் செய்துகொண்டு தங்களை சோதனை செய்யவேண்டும் என்றும் அவ்வாறுசோதனையிட அருககில் உள்ள நீதித்துறை நடுவர் அவர்களிடமோ, அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனை செய்ய கோருவதற்கு உரிமை உள்ளது என்று அவர்கள் உரிமையை விளக்கி கூறியபோது அவர் தாங்களே என்னை சோதனை செய்துகொள்ளலாம் என்று கூறியதன் பேரில் அவர் சம்மதத்தை எழுத்துவடிவில் சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் சோதனை சம்மத கடிதம் தயார் செய்து அதை உதய குமாருக்கு சார்பு செய்தும் பின்னர் அவர் கொடுத்த பாலிதீன் பேக்கை சோதனை செய்யபோது அதில் கஞ்சா என்ற போதைப்பொருள் இருந்தது. அதனை எடைபோட்டபோது அது சுமார் 2 கிலோ இருந்தது. அந்த கஞ்சாவில் இருந்து பகுப்பாய்வுக்காக தலா 100 கிராம் வீதம் இரண்டு மாதிரிகள் எடுத்து காக்கி பேப்பரில் மடித்து நூலால் கட்டி SHO சீல் அதற்கு S1, S2 என குறியீடு செய்து சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். மீதம் உள்ள கஞ்சாவை அதே காக்கி தாளில் மடித்து கட்டி SHO சீல் அதற்கு A1 என குறியீடு செய்தோம். பின்னர் எதிரியை விசாரித்தபோது எவ்வித துன்புறுத்தலும் இன்றி தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார். அதை

நான் அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆஸ்பெட்டாஸ்சீட்டிற்கு அருகில் உள்ள கருவேலம்புதரில் மறைத்து வைத்திருந்த இரண்டு சாக்குப்பைகளில் இருந்த கஞ்சாவை எடுத்து ஆஜர்படுத்தினார். அது ஒவ்வொரு மூட்டையும் தலா 45 கிலோ எடையுடையதாக இருந்தது. அந்த கஞ்சாவில் இருந்து பகுப்பாய்வுக்காக தலா 100 கிராம் வீதம் இரண்டு மாதிரிகள் எடுத்து காக்கி பேப்பரில் மடித்து நூலால் கட்டி SHO சீல் அதற்கு S3, S4 என குறியீடு செய்து சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். மீதம் உள்ள கஞ்சாவை அதே சாக்குபையில் வைத்து கட்டி SHO சீல் அதற்கு A2 என குறியீடு செய்தோம். மற்றொரு மூட்டையில் இருநது பகுப்பாய்வுக்காக தலா 100 கிராம் வீதம் இரண்டு மாதிரிகள் எடுத்து காக்கி பேப்பரில் மடித்து நூலால் கட்டி SHO சீல் அதற்கு S5, S6 என குறியீடு செய்து சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். மீதம் உள்ள கஞ்சாவை அதே சாக்குபையில் வைத்து கட்டி SHO சீல் அதற்கு A3 என குறியீடு செய்தோம். அதை சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் எதிரி உதய குமார் ஆகியோருடன் நிலையம் வந்து காவல்நிலைய குற்ற எண், 82/2013, ச/பி 8(C) r/w 20(b)(ii)( C ) and 25 NDPS Act - ன் கீழான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். பின்னர் அசல் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் கைப்பற்றிய சொத்துக்களை படிவம்-91 தயாரித்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். எதிரிகளையும் சொத்துக்களையும் வழிக்காவல் மூலம் அனுப்பி வைத்தேன். அவ்வாறு நீதிமன்றத்திற்கு எடுத்துச்சென்ற போது நீதிமன்ற உத்தரவுப்படி சான்றுப்பொருட்கள் மீது குற்ற எண் குறிப்பிடவேண்டும் என்று அறிவுறுத்தியதால் நீதிமன்ற அறிவுரைப்படி சான்றுப்பொருட்களின் மீது குற்ற

எண்ணும் சட்டப்பிரிவும் குறியிடப்பட்டது. பின்னர் என்னுடன் கண்காணிப்பில் ஈடுபட்ட சார்பு ஆய்வாளர் -சண்முகம், சிறப்பு சார்பு ஆய்வாளர் -சுந்தரவடிவேல்,கனகராஜ், தலைமைக்காவலர்-ஜெகதீஷ், சாட்சிகள் ஜோதி மற்றும் தங்கராஜ் என்பவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 6 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 7 ஆகும். படிவம்-91 அ.சா.ஆ. 8 ஆகும். பகுப்பாய்வுக்கு சென்று திரும்பிய S1, S2 என குறியிடப்பட்ட கஞ்சா பொட்டலங்கள் சா.பொ. 1 வரிசை ஆகும். A1 என குறியிடப்பட்ட மீதம் உள்ள 1 கிலோ 800 கிராம் கஞ்சா சா.பொ. 2 ஆகும். S3, S4 என குறியிடப்பட்ட கஞ்சா பொட்டலங்கள் சா.பொ.3 வரிசை ஆகும். A2 என குறியிடப்பட்ட சாக்குப்பையில் உள்ள கஞ்சா சா.பொ. 4 ஆகும். S5, S6 என குறியிடப்பட்ட கஞ்சா பொட்டலங்கள் சா.பொ.5 வரிசை ஆகும். A3 என குறியிடப்பட்ட சாக்குப்பையில் உள்ள கஞ்சா சா.பொ. 6 ஆகும்.

**<u>1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில தான் நான் சம்பவ இடம் சென்றேன். ரகசிய தகவலை நான் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்தேன். தனித்தகவலாக பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் பிரிவு 42(1)ன் படி தகவலை பதிவு செய்யாதது போதைப்பொருள் விதிகளை மீறிய செயல் என்றால் சரியல்ல. எனக்கு கிடைத்த தகவலை நான் மேலதிகாரிக்கு தெரிவித்ததற்கு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். ஆனால் அலைபேசிமூலம் தகவல் தெரிவித்தேன். எனக்கு தகவல் 15.00 மணிக்கு கிடைத்தது. சம்பவ இடம் காவல் நிலையத்தில் இருந்து சுமார் 12 கிலோமீட்டர் தொலைவிருக்கும். சம்பவ இடத்திற்கு காவல் வாகனத்தில் சென்றோம். காவல் வாகனத்தில் 7 நபர்கள் சென்றோம். அதில்

பெண்காவலர் யாரும் இல்லை. சம்பவ இடத்திற்கு 16.00 மணிக்கு சென்றோம்.சம்பவ இடத்தில் முதலில் சௌந்திரபாண்டி,பசுங்கிளி,உதயகுமார் இருப்பதை பார்த்தேன். அவர்கள் பெயர் விபரம் பின்னால் விசாரித்து தெரிந்துகொண்டோம். உதயகுமார் என்பவர் மூலம் அவ்வாறு தெரிந்துகொண்டேன். நான் கூறுவதுபோல் இரண்டு நபர்கள் சம்பவ இடத்தில் தப்பி ஓடியதாக கூறுவது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. தப்பி ஓடியவர்களில் ஒருவர் பெண் என்றால் சரிதான். உதய குமாரை 4.15 மணிக்கு சோதனையிட்டோம். சோதனை சம்மத கடிதத்தை நான்தான் எழுதினேன். சோதனை சம்மத கடிதத்தில் எதிரிக்கு அவரது உரிமையை விளக்கி கூறியதாகவும், அதற்கு எதிரி தனியே அவ்வாறு நீதித்துறை நடுவர் , அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடம் அழைத்து செல்ல தேவையில்லை என்று கூறியதாக இல்லை என்றால் சரியல்ல. நீங்களே சோதனை செய்துகொள்ளலாம் என்று மட்டும் கூறியதாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதத்தின் நகல் எதிரிக்கு சார்பு செய்யப்பட்டது. அவ்வாறு சார்பு செய்யப்பட்டதற்கான வாசகங்கள் அதில் காணப்படவில்லை என்றால் சரிதான். எதிரியின் கையொப்பத்தின் கீழ் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால்சரிதான். மாதிரி பொட்டலங்களை யார் எடைபோட்டு முத்திரை யிட்டார்கள் என்று எனது அத்தாட்சியிலோ, சாட்சிகளின் வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 3 ம் எதிரி கையில் வைத்திருந்ததாக கூறப்படும் பாலிதீன் கவர் சான்றுப்பொருளாக கைப்பற்றப்பட்டுள்ளதா என்றால் கைப்பற்றப்படவில்லை. வில்தராசு மற்றும் கைதராசில் பொருட்களை எடைபோட்டோம். நாங்கள் இரண்டு விதமான தராசுகளை எடுத்துச்சென்றதாக குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான். சான்றுப்பொருட்களின் மீது ஒட்டப்பட்ட துண்டுத்தாள்கள் சம்பவ

இடத்திலேயே தயாரித்து ஒட்டப்பட்டதாகும். பொதுவாக காவல் நிலையம் திரும்பிய பின்னர் தான் எந்த குற்ற எண் வழக்கு பதிவு செய்ய தயாராக உள்ளது என்று தெரியும் என்றால் சரிதான். சா.பொ.1 மற்றும் 2 வரிசைகளில் குற்ற எண் சட்டப்பிரிவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்சரிதான். நான் கூறுவதுபோல் உதயகுமார் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் அதை நான் சம்பவ இடத்தில் நான் பதிவு செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஒப்புதல்வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் சான்றுபொருட்களை கைப்பற்றியதும் இல்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையிலும், ஆய்வாளர்-இராமகிருஷ்ணன் விசாரணையிலும் ஆஸ்பெட்டாஸ்கொட்டகையில் வைத்து சா.பொ.3 முதல் 6 கைப்பற்றியதாக கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். ஆஸ்பெட்டாஸ் கொட்டகைக்குள் செல்வதற்கு உதய குமாரிடம் தனியே சோதனை சம்மத கடிதம் பெற்றோமா என்றால் அவ்வாறு தனியே எதுவும் பெறவில்லை. ஆஸ்பெட்டாஸ் கொட்டகைக்குள் கைப்பற்றிய சான்றுப்பொருட்களை எந்தெந்த விதமான தராசுகளில் எடைபோட்டோம் என்று குறிப்பாக அத்தாட்சியிலும், ஆய்வாளர் இராமகிருஷ்ணன் விசாரணையிலும் கூறவிலலை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையிலும் அவ்வாறு கூறவில்லை என்றால் சரிதான். சா.பொ.3 முதல்6 வரையிலான சான்றுப்பொருட்களின் மீதான துண்டுத்தாளில் குற்ற எண்ணும் சாட்டப்பிரிவும் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற உத்தரவுப்படி சான்றுப்பொருட்களின் மீது குற்ற எண்ணும் சட்டப்பிரிவும் குறிப்பிட்டதாக தற்போது பொய் சொல்கிறேன் என்றும் அதுபோன்ற எந்த தகவலும் நான் நீதிமன்றத்திற்கு அனுப்பி ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றும் சொன்னால்சரியல்ல. சான்றுப்பொருட்களின் மீது வைக்கப்பட்ட SHO நிலையத்தில் மட்டுமே இருக்கும் என்றும் வெளியே எடுத்துச்செல்ல இயலாது என்றும் சொன்னால் சரியல்ல. நிலையபொறுப்பு

அலுவலர் வசம் மட்டுமே அது இருக்க வேண்டும் என்றும் வெளியே எடுத்து செல்ல இயலாது என்றும் சொன்னால் சரியல்ல. ஆவணங்களை அனைத்தையும் காவல் நிலையத்தில் வைத்து தயாரித்ததால் தான் அதில் SHO முத்திரை பதிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு நடவடிக்கைகள் முடிந்து 19.00 மணிக்கு காவல் நிலையம் வந்தோம். இரண்டு அத்தாட்சியையும் நான் தான் எழுதினேன். எல்லா ஆவணங்களையும் நான் தான் எழுதினேன். அத்தாட்சியின் நகலை எதிரிக்கு சார்பு செய்ததாக குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் தயார் செய்த அத்தாட்சியில் ஓடிசென்றதாக கூறப்படும் பசுங்கிளி , சௌந்திரபாண்டி ஆகியவர்களின் பெயரை தலைமறைவு எதிரிகள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் சௌந்திரபாண்டிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் நான் இந்த வழக்கை உறுதிப்படுத்தவும், வலுசேர்க்கவும் பொய்யாக 1 ம் எதிரியை இந்த வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. 1 ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 1 ம் எதிரிக்கும் 3 ம் எதிரிக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. தோட்டம் யாருடையது என்பதற்கான ஆவணங்கள் எதையும் நான் பார்க்கவில்லை. ஆரோக்கியம் என்ற இராமர் என்பவர் தோட்டம் என்று 3 ம் எதிரி கூறியதை தவிர வேறு எவ்வாறு உறுதி செய்துகொண்டேன் என்றால் வேறு யாரையும் அது சம்பந்தமாக விசாரிக்கவில்லை. நாங்கள் காவல் நிலையம் வரும் போது உயர் அதிகாரிகள் காவல் நிலையத்தில் இல்லை. உதயகுமாரை கைது செய்வதற்கான காரணம் கூறி கைது நமூனா சார்பு செய்யவில்லை என்றால் சரிதான். நான் பிரிவு 57 ன் படியான விரிவான அறிக்கையை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றியதாக கூறப்படும் கஞ்சாவிற்கும் 1 மற்றும் 3 எ திரிகளுக்கும்எ ந்த

சம்பந்தமும் இல்லை என்றாலும் போதைப்பொருள் விதிகளை முறையாக கடைப்பிடிக்காமலும் மேல் அதிகாரி சொன்னதற்கிணங்க 1 மற்றும் 3ம் எதிரிகள் மீது பொய்யான வழக்கை போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் தகவல் அறிக்கை காலம்(3)ல் தகவல் எந்த விதத்தில் கிடைத்தது என குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான். காலம் (14)ல் தகவல் தந்தவர் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு கிராமநிர்வாக அலலுவர் மற்றும் உதவியாளரை அழைத்து செல்ல வில்லை என்றால் சரிதான். பொதுவாக குற்றம் நடந்த இடத்தில் பார்வைமகஜர் , வரைபடம் தயாரிப்பது வழக்கம் என்றால் போதைப்பொருள் வழக்குகளில் அது அவசியம் இல்லை. நான் கூறுவது தவறு என்றும் தடயபொருட்கள் சேகரிக்கப்படும் இடம் குறித்த வரைபடம் மற்றும் பார்வைமகஜர் அவசியம் என்றும் சொன்னான் சரியல்ல. நான் கூறுவதுபோல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்திற்கு செல்லவில்லை என்றும் அங்கு எந்த விததடய பொருளும் கைப்பபற்ற வில்லை என்றும் அதனால் தான் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவதுபோல் எதிரியிடம் இருந்து கஞ்சா எதுவும் இவ்வழக்கில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முறையாக சாட்சிகள் எவரையும் விசாரணை செய்யாமலும் ஆவணங்களை முறையாக பரிசீலனை செய்யாமலும் காவல் நிலையத்தில் வைத்து தயாரித்த ஆவணங்களில் எதிரியை மிரட்டி கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரிக்கும் வழக்கிற்கும் வழக்கின் சொத்துக்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. போதைப்பொருள் விதிகளை

முறையாக கடைப்பிடிக்காமலும் மேல் அதிகாரி சொன்னதற்கிணங்க 2ம் எதிரி மீது பொய்யான வழக்கை போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.